இணைப்பு

17-ம் பக்கத்தில் 306 ம் எண்ணுள்ள வினவிற்குரிய விடையைக் காண்க.

(*a*) The affairs of the Co-operative Central Bank, Limited, Vellore in North Arcot District have not been satisfactory for sometime past. Serious irregularities in the scrutiny, sanction and disbursement of loans have been noticed. The Joint Registrar, Madras Region, who has been asked to examine the working of the Bank has reported that the committee of the Central Bank is responsible for the state of affairs of the bank and recommended its dissolution. The entire matter was examined and a notice under section 72 of the Madras Co-operative Societies Act, (53) of 1961 was issued to the committee of the Co-operative Central Bank Limited, on 1st December 1967 directing the committee to make its representation, if any, against the proposal to dissolve the committee and to appoint a nominee of the Registrar of Co-operative Societies to manage the affairs of the Bank.

(*b*) The Committee of the Central Bank has made its representation on 14th February 1968. But at the same time the Committee had filed a Writ Petition No. 3822 of 1967 in the High Court of Judicature, Madras praying for the issue of a writ of prohibition, prohibiting the Registrar of Co-operative Societies from proceeding further in pursuance of the notice issued by the Registrar on 1st December 1967. The writ was admitted by the High Court and was later dismissed after hearing and the stay was vacated. The judgment in the above Writ Petition was delivered on 28th February 1969. Immediately the committee of the Co-operative Central Bank, Limited, Vellore filed a Writ Appeal No. 113 of 1969 in the High Court of Judicature, Madras. The judgment in the above case was delivered on 22nd April 1969. The Court held that having regard to the words used in section 72 of the Madras Co-operative Societies Act, it is only the recent irregularities or mismanagement that can be taken into account and has directed the issue of fresh show cause notice after considering the charges once again in the light of the judgment. The show cause notice dated 1st December 1967 issued by the Registrar has been quashed by the Honourable Court.

(அ) கடந்த சில காலமாக வட ஆற்காடு மாவட்டம், வேலூரிலுள்ள கூட்டுறவு மத்திய வங்கியின் அலுவலர்கள் மன நிறைவு தரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்து கடுமையான முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது. இந்த வங்கி செயல்படுவது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சென்னை வட்டாரத்தின் இணைப் பதிவாளர், வங்கியின் சீர்கேடான நிலைக்கு கூட்டுறவு மத்திய வங்கியின் குழுவே பொறுப்பாகும் என்று தெரிவித்து அக்குழுவைக் கலைத்துவிட வேண்டும் என்று பரிந்துரைத்தார். இதுபற்றி முழுவதும்

ஆராயப்பட்டது. குழுவைக் கலைத்துவிடவும் வங்கியின் பொறுப்பை நிர்வகிப்பதற்கு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நியமனதாரரை நியமிப்பதற்குமான செயற் குறிப்புக்கு எதிராக முறையீடு ஏதேனுமிருப்பின் அதைத் தெரிவிக்குமாறும், கட்டளையிட்டு 1-12-1967 அன்று கூட்டுறவு மத்திய வங்கியின் குழுவிற்கு, தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 72-வது பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட்டது.

(இ) 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதியன்று மத்திய வங்கியின் குழு தனது முறையீட்டைக் கொடுத்துக் கொண்டது. ஆனால் அதே சமயத்தில் 1-12-1967 அன்று பதிவாளரால் வெளியிடப்பட்ட அறிவிப்பையொட்டி கூட்டுறவுச் சங்க பதிவாளர் மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்து, தடை ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் 1967-ம் ஆண்டு 3822-ம் எண்ணுள்ள ரிட் மனு ஒன்றை அக்குழு தாக்கல் செய்தது. இந்த ரிட் மனு உயர்நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. விசாரணைக்குப் பிறகு இது தள்ளி விடப் பட்டது. நிறுத்தி வைப்பு ஆணை ரத்து செய்யப்பட்டது. மேற் கூறிய ரிட் மனு குறித்து 28-2-1969 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. உடனே வேலூர் கூட்டுறவு மத்திய வங்கியின் குழு, சென்னை உயர்நீதி மன்றத்தில் 1969-ம் ஆண்டு 113-ம் எண்ணுள்ள மேல் முறையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. மேற்கூறிய வழக்கு குறித்து 22-4-1969 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 72-வது பிரிவில் பயன்படுத்தப் பட்டுள்ள சொற்களை பொருள்கொண்டு பார்க்கையில் அண்மையில் நடந்த முறைகேடான செயல்கள் அல்லது நிர்வாக முறைகேடுகளை கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்று நீதிமன்றம் அறிவித்தது. மேலும், இத்தீர்ப்பையொட்டி குற்றச்சாட்டுகளை மறுபடியும் ஆராய்ந்து பிறகு, குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது என்று காரணம் காட்டுமாறு புதிதாக அறிவிப்பு வெளியிடும்படியும் அது கட்டளையிட்டது. குற்றச் சாட்டுகளுக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு பதிவாளர் 1—12—1967 அன்று பிறப்பித்த அறிவிப்பு மாண்புமிகு நீதிமன்றத்தினரால் ரத்து செய்யப்பட்டது.